## நடவடிக்கை 1

லகர, ழகர, ளகரச் சொற்கள் அடங்கிய வாக்கியங்களை வாசித்திடுக.

## நடவடிக்கை 2

சரியான லகர, ழகர, ளகரச் சொற்களை எழுதுக.

1.
   - கடற்கரையில் நின்று கடல் ______ பார்த்து இரசித்தோம்.
   - தம்பியின் தலைமுடியை அம்மா வாஞ்சையுடன் ______ ந்தவாறு அமர்ந்திருந்தான்.
   - மாணவனின் பெயரைச் சொல்லி ஆசிரியர் ______ த்தார்.

2.
   - வெகுதூரம் நடந்ததால் தங்கைக்குக் கால் ______ ஏற்பட்டது.
   - தோட்டத்திற்குச் செல்லும் ______ கரடுமுரடாக இருந்தது.
   - காற்றை ______ என்றும் கூறலாம்.

3.
   - குரங்கின் ______ நீளமாக இருந்தது.
   - வீரர்கள் கையில் கூர்மையான ______ வைத்திருந்தனர்.
   - முதியவர் மணமக்களை 'நீடூழி ______ க' என வாழ்த்தினார்.

4.
   - தம்பி புலியைக் கண்டு ______ பிடித்தவன் போல் அலறினான்.
   - புத்தகங்களை மாணவர்கள் ______ க்கக் கூடாது.
   - பச்சை நிற ______ ஒன்று மரக்கிளையில் அமர்ந்திருந்தது.

5.
   - அம்மா குழந்தைகளைக் கொஞ்சிக் ______ னார்.
   - மரத்தடியில் அமர்ந்திருந்த தாத்தாவை ______ கொட்டியது.
   - குழந்தையை ______ என்றும் கூறுவர்.

| | | | | |
|---|---|---|---|---|
| வாள் | அளை | வழி | குலவி | கிளி |
| வால் | அழை | வலி | குளவி | கிழி |
| வாழ் | அலை | வளி | குழவி | கிலி |

LIVEWORKSHEETS